**R 5030 (page 166)** [தெரிந்தெடுக்கப்பட்ட பத்திகள்]

# இராஜியத்தில் சிறியவனாய் இருப்பவன்

# LEAST IN THE KINGDOM

"ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப் பார்க்கிலும் பெரியதீர்க்கதரிசி ஒருவனுமில்லை; ஆகிலும், தேவனுடைய ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரியவனாயிருக்கிறானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." (லூக்கா 7:28)

## விசேஷித்த நன்மையானதொன்றை நமக்காக...

இயேசுவினுடைய பூமிக்குரிய ஊழியத்தின்போது, ஐந்நூறு சகோதர சகோதரிகள், அவரது அர்ப்பணிக்கப்பட்ட பின்னடியார்களானபோது, அவர்கள் பிதாவினால் குமாரர்களென அப்போது ஏற்றுக்கொள்ளப்படவில்லை; பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்புவரையிலும் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவுமில்லை. இயேசு தம்முடைய பலியை நிறைவேற்றி, மகா பரிந்துபேசுபவராக, அதாவது பிதாவிடம் நமக்காகப் பரிந்துபேசத்தக்கதாக, நீதிமானாகிய இயேசு கிறிஸ்து "நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசியாதது வரையிலும்," தேவன் யாரையும் குமாரர்கள் என்று அங்கீகரிக்கவில்லை. இந்தப் புத்திரர் வகுப்பாருக்குள் எப்படி ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் தீர்க்கத்தரிசிகள் யாரும் வருவதில்லையோ, அதுபோலவே இவ்வகுப்பாருக்குள் யோவானும் வருவதில்லை. தேவனுடைய ஏற்பாட்டில், இவர்களது வெகுமதியானது, சபையினின்று வேறுபட்டிருக்கும்; இவர்களுடையது பூமிக்குரிய பலனாய்க் காணப்படும். இவர்கள் மனித பரிபூரணத்திற்கு உயிர்த்தெழுப்பப்படுவார்கள். இவர்கள் இராஜ்யத்தின் மனித தளத்தில் காணப்பட்டு, ஆவிக்குரிய ஜீவிகளாகவும், மனுஷருடைய கண்களுக்குப் புலப்படாதவர்களாகவும் காணப்படப்போகும் மேசியா மற்றும் சபையின் பூமிக்குரிய பிரதிநிதிகளாகக் காணப்படுவார்கள்; இந்த உயர்ப்பண்புள்ளவர்களாகிய முற்பிதாக்கள் வாயிலாக மேசியாவும், சபையும் மனுக்குலத்தினைக் கையாண்டு நடத்துவார்கள்.

கிறிஸ்துவுக்கு முந்தைய காலங்களில் வாழ்ந்தவர்கள் என்று வேதவாக்கியங்களினால் குறிப்பிடப்படும் இந்தப் பிரமாண்டமான பாத்திரங்களை, நாம் சுவிசேஷ யுக சபையைவிட உண்மையில் குறைந்தவர்கள் என்றோ, மட்டமானவர்கள் என்றோ எண்ணிவிடக்கூடாது; மாறாக தேவன் கிறிஸ்துவின் மணவாட்டிகளுக்குப் பரலோகப் பரிபூரணத்தை வாக்களித்தபோது, இந்த முற்காலத்துப் பாத்திரங்களுக்கு அவர் பூமிக்குரிய பரிபூரணத்தை வாக்களித்திருந்தவராய்க் காணப்பட்டார். இவர்கள் மீதமுள்ள மனுக்குலத்தார் போன்று, மேசியாவின் ஆயிர வருஷ ஆளுகையின்போது, படிப்படியாகப் பரிபூரணத்தை அடையத்தக்கதாக, அபூரண நிலையில் எழும்பி வருவதில்லை; மாறாக இவர்கள் பரிபூரண மனித ஜீவிகளென உயிர்த்தெழுந்து வருவார்கள். அதுவே இவர்களது உண்மைக்கான வெகுமதியாய்க் காணப்படும். இந்த முழுக்காரியத்தையும் பரிசுத்த பவுல் அடிகளார் எபிரெயர் 11-ஆம் அதிகாரத்தில் விவரித்துள்ளார். அந்த முற்பிதாக்களின் விசுவாசம் மற்றும் வீரம் குறித்து அவர் நமக்குக் கூறுகின்றார்; இன்னுமாக "தேவனுக்குப் பிரியமானவர்களென்ற சாட்சிபெற்றார்கள்" என்றும் கூறுகின்றார். இவர்களை எதிர்காலத்தில் இன்னும் பரீட்சிப்பதற்கான அவசியம் இராது. இவர்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளனர் எனும் காரியமானது ஏற்கெனவே நிரூபிக்கப்பட்டுள்ளது மற்றும் அறிக்கையும் பண்ணப்பட்டுள்ளது.

இதுவுமல்லாமல் தேவனுடைய ஏற்பாட்டில், இராஜ்ய வகுப்பாராகிய கிறிஸ்து மற்றும் சபை முதலாவது

நிறைவடையாதது வரையிலும், உலகத்திற்கான பூமிக்குரிய இராஜ்யமும், திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களும் துவங்கமுடியாது; ஆகையாலே அப்போஸ்தலன்: "இவர்களெல்லாரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை (பூமிக்குரியவைகளை) அடையாமல் விசுவாசத்தோடே மரித்தார்கள். அவர்கள் (சபையாகிய) நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" என்று கூறியுள்ளார். சபை மூலமான ஆசீர்வாதங்களானது, ஆபிரகாமின் மாம்சீக சந்ததியாருக்கும், பின்னர் இந்த இஸ்ரயேல் வாயிலாகச் சகல ஜாதிகளுக்கும் கடந்துசெல்வதற்கு முன்னதாக, சபை முதலாவது மகிமையடைய வேண்டும்; பூரணமடைவதற்குரிய அவளது உயிர்த்தெழுதலை அடையவேண்டும். (எபிரெயர் 11:38-40)

## மணவாட்டியாக அல்ல, நண்பர்களாக

"மணவாட்டியை உடையவனே மணவாளன்; மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக்குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான்; இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று" (யோவான் 3:29) என்று யோவான்ஸ்நானன் கூறினபோது, அவர் சூழ்நிலையினைப் புரிந்தவராக அல்லது தீர்க்கத்தரிசனமாக, இச்சத்தியத்தினைப் பேசியிருந்திருக்க வேண்டும். தேவனுடைய ஏற்பாட்டில் தனக்கு மிகவும் கனமிக்க, ஆசீர்வாதமான ஸ்தானமும், வேலையும் இருக்கின்றது என்று புரிந்துகொண்டார்; தான் மணவாளனும் இல்லை, மணவாட்டி வகுப்பாரில் ஓர் அங்கத்தினனும் இல்லை என்றும் புரிந்துகொண்டார்.

இது அப்போது யோவான் ஏமாற்றமடைந்தார் என்றோ, உயிர்த்தெழுந்து இவரும், மற்ற முற்பிதாக்களும் வருகையில், தங்களைவிட உயர்வான ஒரு தளத்திற்கு, ஒரு மணவாட்டி வகுப்பார் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என்று அறியும்போது ஏமாற்றம் அடைவார்கள் என்றோ அர்த்தமாகாது. மாறாக இவர்களது ஆசீர்வாதத்தின் பாத்திரம் நிரம்பிக் காணப்படப்போவதினாலும், பரிசுத்த ஆவியினால் ஆவிக்குரிய சுபாவத்திற்கு இவர்கள் ஒருபோதும் ஜெநிப்பிக்கப்படாதபடியாலும், இவர்கள் தங்களைவிட உயர்வானதாய்க் காணப்படும் எந்த ஓர் ஆசீர்வாதத்தையும் புரிந்துகொள்ள இயலாதவர்களாகக் காணப்படுவார்கள். உதாரணத்திற்குத் தண்ணீரில் இருக்கும் மீனானது, காற்றில் பறவை பறப்பதைப் பார்க்கையில், அப்பறவையையும் அதன் பெரிய சுதந்தரத்தையும் கண்டு பொறாமை அடையாது; மாறாக தண்ணீரில், அதாவது அதன் இயல்பான தன்மையில் நன்கு திருப்திகொண்டதாய்க் காணப்படும்; இதுபோலவே பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத சுபாவ மனிதர்கள் அனைவரும், அவர்களுக்காகத் தெய்வீக ஏற்பாடு ஒழுங்குப்படுத்தியுள்ள பூமிக்குரிய ஆசீர்வாதங்களின் மதிப்பையே அதிகமாய்ப் புரிந்துகொள்வார்கள்.

---